# DAILY CURRENT AFFAIRS ON O9/MARCH/2026



# நாடாளுமன்றம் இன்று மீண்டும் கூடுகிறது

**புது தில்லி, மார்ச் 8:** பரபரப்பான அரசியல் சூழலில், நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு திங்கள் கிழமை (மார்ச் 9) தொடங்குகிறது.

மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை பதவி நீக்கக் கோரும் எதிர்க் கட்சிகளின் தீர்மானம், விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்காக முதல் நாளில் தாக்கலாக உள்ளது.

ஏப். 2 வரை நடைபெறும் இந்த அமர்வில் மேற்காசிய போர் நிலவரம், ஈரான் மீதான மத்திய அரசின் நிலைப்பாடு, அமெரிக்க அனுமதியின்பேரில் ரஷிய எண்ணெய் கொள்முதல் உள்ளிட்ட விவகாரங்களை எதிர்க்கட்சிகள் எழுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த ஜன. 28-ஆம் தேதி குடியரசுத் தலைவர் உரையுடன் தொடங்கியது. கடந்த பிப்.13-ஆம் தேதியுடன் நிறைவடைந்த முதல்கட்ட அமர்வில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டன.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது ராகுல் காந்தி பேச அனுமதிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு, முன்னாள் ராணுவ தலைமைத் தளபதி எம்.எம்.நரவணேயின் வெளியிடப்படாத சுயசரிதை நூல் சர்ச்சை, இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், எப்ஸ்டீன் ஆவணங்கள் போன்ற விவகாரங்களை எழுப்பி, மத்திய அரசுடன் எதிர்க்கட்சிகள் மோதல்போக்கை கடைப்பிடித்தன.

## மக்களவைத் தலைவருக்கு எதிரான தீர்மானம் தாக்கல்

**எதிர்க்கட்சிகளின் தீர்மானம்:** முதல்கட்ட அமர்வில் கடும் அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 8 பேரை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா இடைநீக்கம் செய்தார். மேலும், மக்களவையில் பிரதமர் மோடியிடம் 'எதிர்பாராத செயலில்' ஈடுபட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் திட்டமிட்டிருந்ததாக பரபரப்பான குற்றச்சாட்டையும் அவர் சுமத்தினார். இதனால் கடும் அதிருப்தியடைந்த எதிர்க்கட்சிகள், ஓம் பிர்லா பாரபட்சமாக செயல்படுவதாகக் கூறி, அவரைப் பதவிநீக்கம் செய்யக் கோரி தீர்மானம் கொண்டுவர நோட்டீஸ் அளித்தன.

இதில் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் 118 எம்.பி.க்கள் கையொப்பமிட்டனர். தனக்கு எதிரான நோட்டீஸ் அளிக்கப்பட்ட நாளில் இருந்து



மக்களவை அலுவல்களுக்கு ஓம் பிர்லா தலைமை வகிக்கவில்லை.

**இன்றுமுதல் இரண்டாம் கட்ட அமர்வு:** இந்தச் சூழலில், பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு திங்கள்கிழமை தொடங்கி ஏப். 2 வரை நடைபெறவுள்ளது. முதல் நாள் அலுவலில், மக்களவைத் தலைவருக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் தீர்மானம் பட்டியலிடப்பட்டுள்ளது.

50 எம்.பி.க்கள் எழுந்து நின்று ஆதரவு அளித்ததும் தீர்மான நோட்டீஸ் ஏற்கப்பட்டு, விவாதம் தொடங்கும். விவாத நிறைவுக்குப் பின்னர் வாக்கெடுப்பு நடைபெறும். இதையொட்டி, மார்ச் 9 முதல் 11 வரை தங்கள் எம்.பி.க்கள் அனைவரும் அவை அலுவல்களில் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று காங்கிரஸ் தரப்பில் கொறடா உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாஜக தரப்பிலும் இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தீர்மானநோட்டீஸில்கையொப்பமிடாத திரிணமூல் காங்கிரஸ் கட்சி, இப்போது மக்களவையில் தீர்மானத்தை ஆதரிக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

**'தோல்வியைச் சந்திக்கும்':** கடந்த காலங்களில் மக்களவைத் தலைவர்களாக இருந்த ஜி.வி. மாவலங்கர் (1954), ஹுக்கம் சிங் (1966), பல்ராம் ஜாக்கர் (1987) ஆகியோர் இதுபோல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொண்டனர். ஆனால், எந்தத் தீர்மானமும் வெற்றி பெறவில்லை. தற்போது எம்.பி.க்கள் பலத்தின் அடிப்படையில், ஓம் பிர்லாவுக்கு எதிரான தீர்மானமும் தோல்வியையே சந்திக்கும்.

மேற்கு வங்கத்தில் விரைவில் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) விவகாரத்தை ஆளும் திரிணமூல் காங்கிரஸ் தீவிரமாக எழுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், மேற்கு வங்கத்தில் சில தினங்களுக்கு முன்னர் குடியரசுத் தலைவர் பயணத்தின்போது மாநில அரசால் நடைமுறைகள் மீறப்பட்டு, அவர் அவமதிக்கப்பட்டதாக எழுந்துள்ள சர்ச்சையை பாஜக எழுப்ப வாய்ப்புள்ளது.

## மேற்காசிய நிலவரம்: வெளியுறவு அமைச்சர் அறிக்கை

மேற்காசிய நிலவரம் தொடர்பாக மக்களவையில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் திங்கள்கிழமை அறிக்கை தாக்கல் செய்து உரையாற்றவுள்ளார்.

மக்களவை அலுவல்கள் குறித்து ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட பட்டியலில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மேற்காசிய நிலவரத்தில் அறிக்கை மட்டும் போதாது; விவாதமும் நடத்தப்பட வேண்டும்' என்று காங்கிரஸ் ஏற்கெனவே வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

Activate Windows
Go to Settings to activate Windows.








# ‘பெண் வழக்குரைஞர்களை உயர்நீதிமன்ற கொலீஜியங்கள் பரிசீலிக்க வேண்டும்’

புது தில்லி, மார்ச் 8: உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு பெண் வழக்குரைஞர்களை பரிந்துரைப்பது குறித்து உயர்நீதிமன்ற கொலீஜியங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் தெரிவித்தார்.

இது குறித்து புது தில்லியில் நடைபெற்ற இந்திய சட்டத் துறை பெண்களின் முதல் தேசிய மாநாட்டில் அவர் ஞாயிற்றுக்கிழமை பேசியதாவது:

பெண் வழக்குரைஞர்கள் சலுகைகளை எதிர்பார்க்கவில்லை என்ற உண்மையை வழக்குரைஞர்கள் சங்கத்தில் இருப்பவர்கள் ஏற்க வேண்டும். தங்களுக்குரிய பிரதிநிதித்துவம் நியாயமான முறையில் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர். ஆனால், நீண்ட காலமாக அது நிறைவேறாமல் உள்ளது.

சீர்திருத்தத்தின் ஒரு பகுதி உயர்நீதிமன்ற கொலீஜியங்களில் உள்ளது. குறிப்பிட்ட நோக்கத்துடன் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை வருங்காலத்தில்தான் செய்ய வேண்டும் என்றில்லாமல், அதை நிகழ் காலத்தில் செய்ய வேண்டும் என்பதை அந்த கொலீஜியம்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு மாநிலத்தைச் சேர்ந்த பெண் வழக்குரைஞர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குரைஞர்களாகப் பணியாற்றி வந்தால், அவர்களை உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு பரிந்துரைப்பது குறித்து அந்த வழக்குரைஞர்களின் மாநிலங்களில் உள்ள உயர்நீதிமன்ற கொலீஜியங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

1.October 17 is observed globally as:

A) International Day of Peace
B) International Day for the Eradication of Poverty
C) World Food Day
D) International Literacy Day

**1.அக்டோபர்** 17 உலகளவில் எந்த நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது?

A) சர்வதேச அமைதி நாள்
B) சர்வதேச வறுமை ஒழிப்பு நாள்
C) உலக உணவு நாள்
D) சர்வதேச கல்வியறிவு நாள்




**2.“Ocean Sky 2025” is an exercise conducted by the Indian Air Force in which country?**

A) France
B) Spain
C) Germany

**2.“Ocean Sky 2025”** என்பது எந்த நாட்டில் நடைபெற்ற இந்திய விமானப்படையின் பயிற்சி (Exercise)?

A) பிரான்ஸ்
B) ஸ்பெயின்
C) ஜெர்மனி

| | |
|---|---|
| D) Italy | D) இத்தாலி |

| List – I (Award) | | List – II (Awardee) |
|---|---|---|
| 1. Bharathiyar Award 2025 | A | K. J. Yesudas |
| 2. M. S. Subbulakshmi Award 2025 | B | N. Murugesa Pandian |
| 3. Balasaraswathi Award 2025 | C | Muthukannammal |

**Options:**

A) 1–B, 2–A, 3–C
B) 1–A, 2–B, 3–C
C) 1–C, 2–A, 3–B
D) 1–B, 2–C, 3–A

| பட்டியல் – I (விருது) | | பட்டியல் – II (விருது பெற்றவர்) |
|---|---|---|
| 1. பாரதியார் விருது 2025 | A | கே. ஜே. யேசுதாஸ் |
| 2. எம். எஸ். சுப்புலட்சுமி விருது 2025 | B | என். முருகேச பாண்டியன் |
| 3. பாலசரஸ்வதி விருது 2025 | C | முத்துக்கண்ணம்மாள் |

4. **Vaikom Award for Social Justice – 2025 was awarded to whom?**

A) Medha Patkar
B) Thenmozhi Soundararajan
C) Aruna Roy
D) Bezwada Wilson

**2025 ஆம் ஆண்டிற்கான வைகம் சமூகநீதி விருது (Vaikom Award for Social Justice)** யாருக்கு வழங்கப்பட்டது?

A) மேதா பட்கர்
B) தென்மொழி சௌந்தரராஜன்
C) அருணா ராய்
D) பெஸ்வாடா வில்சன்




**5. Which organization is the main nodal agency for implementing the 'Thisaidhorum Dravidam' scheme?**

(a) Tamil University, Thanjavur
(b) Sahitya Akademi
(c) Tamil Nadu Textbook and Educational Services Corporation
(d) International Institute of Tamil Studies

5. **'திசைதோறும் திராவிடம்' திட்டத்தை செயல்படுத்துவதற்கான முக்கிய நோடல் நிறுவனம் எது?**

(அ) தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
(ஆ) சாகித்ய அகாடமி
(இ) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி சேவைகள் கழகம்
(ஈ) சர்வதேச தமிழ் ஆய்வுகள் நிறுவனம்




.

**Translating classic and contemporary Tamil literary works into various Indian and Foreign languages.**

தமிழ் இலக்கியப் படைப்புகளை பல்வேறு இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்த்தல்.

6.

| List I (Entity) | List II (Core Function) |
|---|---|
| **A. TNPDCL** | 1. High-voltage power transmission and grid management |
| **B. TNPGCL** | 2. Renewable energy development and Hydro-electric projects |
| **C. TNGECL** | 3. Electricity distribution and consumer service management |
| **D. TANTRANSCO** | 4. Power generation through Thermal and Fossil fuel sources |

| List I (அமைப்பு) | List II (முக்கிய செயல்பாடு) |
|---|---|
| A. TNPDCL | 1. உயர் மின்னழுத்த மின்சார பரிமாற்றம் மற்றும் கிரிட் மேலாண்மை |
| B. TNPGCL | 2. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாடு மற்றும் நீர்மின் திட்டங்கள் |
| C. TNGECL | 3. மின்சார விநியோகம் மற்றும் நுகர்வோர் சேவை மேலாண்மை |
| D. TANTRANSCO | 4. வெப்ப மற்றும் எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தி |

**Codes:**

(a) A-3, B-4, C-2, D-1
(b) A-1, B-2, C-3, D-4
(c) A-3, B-2, C-4, D-1
(d) A-4, B-3, C-1, D-2

**6. The Biswanath Goldar Committee is primarily tasked with which of the following objectives?**

(a) Designing a new framework for the 16th Finance Commission's tax devolution.
(b) Revising India's GDP base year from 2011-12 to 2022-23 to modernize economic data.
(c) Proposing a unified regulatory body for both the WPI and CPI inflation indices.
(d) Evaluating the transition of the Indian

**பிஸ்வநாத் கோல்டர் குழு பின்வரும் எந்த நோக்கங்களை முதன்மையாகக் கொண்டுள்ளது?**

(அ) 16வது நிதி ஆணையத்தின் வரிப் பரவலாக்கத்திற்கான புதிய கட்டமைப்பை வடிவமைத்தல்.
(ஆ) பொருளாதாரத் தரவை நவீனமயமாக்க இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படை ஆண்டை 2011-12 முதல் 2022-23 வரை திருத்துதல்.
(இ) WPI மற்றும் CPI பணவீக்கக் குறியீடுகள் இரண்டிற்கும் ஒரு ஒருங்கிணைந்த

<table>
<tr><td>economy from a developing to a developed nation by 2047.</td><td>ஒழுங்குமுறை அமைப்பை முன்மொழிதல்.<br>(ஈ) 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியப் பொருளாதாரம் வளரும் நாட்டிலிருந்து வளர்ந்த நாடாக மாறுவதை மதிப்பீடு செய்தல்.</td></tr>
<tr><td></td><td>
</td></tr>
<tr><td>7. Which city was officially announced as the host for the 2027 AI Impact Summit?<br>(a) Paris, France<br>(b) Geneva, Switzerland<br>(c) Abu Dhabi, UAE<br>(d) Seoul, South Korea</td><td>2027 AI தாக்க உச்சி மாநாட்டை நடத்தும் நகரமாக எந்த நகரம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது?<br><br>(அ) பாரிஸ், பிரான்ஸ்<br>(ஆ) ஜெனீவா, சுவிட்சர்லாந்து<br>(இ) அபுதாபி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ்<br>(ஈ) சியோல், தென் கொரியா</td></tr>
<tr><td colspan="2">
</td></tr>
<tr><td>8. National Science Day is celebrated to</td><td>8. பின்வரும் எந்த நிகழ்வைக் குறிக்க தேசிய அறிவியல் தினம்</td></tr>
</table>

| | |
|---|---|
| **mark which of the following events?**<br>(a) The birth anniversary of Dr. A.P.J. Abdul Kalam.<br>(b) The successful launch of India's first satellite, Aryabhata.<br>(c) The discovery of the 'Raman Effect' by Sir C.V. Raman. (d) The establishment of the Indian Space Research Organisation (ISRO) | கொண்டாடப்படுகிறது?<br>(அ) டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் பிறந்தநாள்.<br>(ஆ) இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் ஆர்யபட்டாவின் வெற்றிகரமான ஏவுதல்.<br>(இ) சர் சி.வி. ராமன் 'ராமன் விளைவை' கண்டுபிடித்தது.<br>(ஈ) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) நிறுவப்பட்டது |







| | |
|---|---|
| **9. Exercise Dharma Guardian is a joint military exercise conducted annually between which of the following two nations?**<br>(a) India and France<br>(b) India and USA<br>(c) India and Japan<br>(d) India and Australia | 9. தர்மா கார்டியன் பயிற்சி என்பது பின்வரும் எந்த இரண்டு நாடுகளுக்கு இடையே ஆண்டுதோறும் நடத்தப்படும் கூட்டு இராணுவப் பயிற்சியாகும்?<br>(அ) இந்தியா மற்றும் பிரான்ஸ்<br>(ஆ) இந்தியா மற்றும் அமெரிக்கா<br>(இ) இந்தியா மற்றும் ஜப்பான்<br>(ஈ) இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா |




| | |
|---|---|
| **10. Which of the following sets of countries correctly represents the members of the I2U2 Group?**<br>(a) India, Indonesia, USA, and Uzbekistan<br>(b) India, Israel, United Arab Emirates (UAE), and United States (USA)<br>(c) Iraq, Iran, United Kingdom (UK), and United States (USA)<br>(d) India, Israel, Ukraine, and United States (USA) | **10. பின்வரும் நாடுகளில் எது I2U2 குழுவின் உறுப்பினர்களை சரியாகக் குறிக்கிறது?**<br><br>(அ) இந்தியா, இந்தோனேசியா, அமெரிக்கா மற்றும் உஸ்பெகிஸ்தான்<br>(ஆ) இந்தியா, இஸ்ரேல், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யுஏஇ), மற்றும் அமெரிக்கா (யுஎஸ்ஏ)<br><br>(இ) ஈராக், ஈரான், ஐக்கிய இராச்சியம் (யுகே), மற்றும் அமெரிக்கா (யுஎஸ்ஏ)<br>(ஈ) இந்தியா, இஸ்ரேல், உக்ரைன் மற்றும் அமெரிக்கா (யுஎஸ்ஏ) |


India, Israel, UAE And US Form
NEW I2U2 Grouping
US to hold first summit
AffairsCloud

| | |
|---|---|
| | |